# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 321/பே/2015

ஆணை எண். 88/2017

நாள் : 03/05/2017

**திரு. எஸ். திருமூர்த்தி,**
**2, பூதாண்டி கோவில் வீதி,**
**கஞ்சிகோணாம்பாளையம், வெள்ளலூர்,**
**கோயம்புத்தூர் மாவட்டம் –641 111.** – **முறையீட்டு மனுதாரர்**

**செயல் அலுவலர்,**
**வெள்ளலூர் பேரூராட்சி,**
**வெள்ளலூர், கோயம்புத்தூர் மாவட்டம் .** – **எதிர்மனுதாரர்**

கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர், கஞ்சிகோணாம் பாளையம், எண்.2, பூதாண்டி கோவில் தெரு முகவரியில் வசிக்கும் திரு S. சுந்தரமூர்த்தி அவர்களின் 08.12.2015 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 10.12.2015 அன்று பெறப்பட்டு 321/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு மற்றும் எதிர்மனுதாரர்களின் அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை:</u>

கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர், கஞ்சிகோணாம் பாளையம், எண்.2, பூதாண்டி கோவில் தெரு முகவரியில் வசிக்கும் திரு S. சுந்தரமூர்த்தி அவர்கள், தனது 08.12.2015 நாளிட்ட முறையீட்டு மனுவில் வெள்ளலூர் பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் மீது கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(i) தனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட விவசாய நிலங்களில் எவ்விதமான முறையான அனுமதியும் பெறாமலும், பொது ஒதுக்கீடு எதுவும் செய்யாமலும் ஏற்படுத்தப்பட்ட "திருவாதிரை ரெசிடென்சி" என்ற மனைப்பிரிவில், திரு விஸ்வநாதன் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் ரூ.11,053/– பெற்றுக்கொண்டு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கியது ;

(ii) 2015–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் திருவாதிரை ரெசிடென்சி வீட்டுமனைப்பிரிவில் பொது உபயோகம் குறித்து தானப்பத்திரம் செயல் அலுவலர் பெயரில் பதிவு செய்து வழங்கியது ;

(iii) மேற்குறிப்பிட்ட வீட்டுமனைப்பிரிவில் அனுமதி இல்லாமல் கட்டிய கட்டிடங்களை அகற்றக்கோரி செயல் அலுவலருக்கு முறையீடு செய்தும் நடவடிக்கை எடுக்கத் தவறியது ;

2. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. 29.01.2016 நாளிட்ட அன்னாரது அறிக்கையில், வெள்ளலூர் பேரூராட்சி செயல் அலுவலர் பெயரில் 21.08.2015 நாளிட்ட ஆவண எண்.7924/2015–ல் 10 சதவிகிதம் சாலை மற்றும் பொது இடங்களை தானமாகப் பெறப் பட்டுள்ளதென்று தெரிவித்துள்ளார். மேலும், அனுமதி பெறாத "திருவாதிரை ரெசிடென்சி" மனைப்பிரிவில் வீடுகள் கட்டுவதற்கு ஐந்து நபர்களுக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. வெள்ளலூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் பணியிடத்தில் கூடுதல் பொறுப்பில் இருந்த திரு ம. லட்சுமணன் அவர்களிடம் 04.04.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது திரு விஸ்வநாதன் என்பவர் கட்டிட அனுமதி கோரி தன்னிடம் விண்ணப்பித்ததாகவும் பேரூராட்சி தலைவர் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் விரைவாக ஒப்புதல் அளிக்க வேண்டுமென தெரிவித்ததனால் 19.10.2011 அன்று தன்னால் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டது என்றும், ஆனால் சம்பந்தப்பட்ட நிலங்களில் மனைப்பிரிவுகள் ஏற்படுத்த நகர் ஊரமைப்பு இயக்குநரால் அனுமதி பெறப்படவில்லையென்றும், பொதுப்பயன்பாட்டுக்கான நிலங்களும் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

4. 2015–ஆம் ஆண்டில் வெள்ளலூர் பேரூராட்சியின் செயல் அலுவலராகப் பணியாற்றிய திரு ந. சுரேஷ்குமார் அவர்களிடமும் 23.03.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. செயல் அலுவலர் திரு ந. சுரேஷ்குமார் அவர்களும், அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப்பிரிவில் ஒரு ஏக்கர் பரப்பளவில் வீடுகள் கட்டப்பட்டு விட்டதால், பொது இடத்திற்கான 10% இடத்தை பேரூராட்சிக்குத் தானமாகப் பெற்று அதற்குரிய வளர்ச்சி கட்டணத்தை வசூலித்ததாக விசாரணையின்போது தெரிவித்தார். பேரூராட்சிக்கு 10% தானமாக பெறுவதற்கு ஆவணம் தயார் செய்தபோது அந்தவீட்டுமனைப் பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைப்பிரிவா என்பது தனக்குத் தெரியாது எனவும் தெரிவித்தார்.

5. வெள்ளலூர் பேரூராட்சியின் செயல் அலுவலர்களிடம் விசாரணை மேற்கொண்டபின்பு 18.04.2016 அன்று முறையீட்டு மனுதாரர் திரு S. திருமூர்த்தி அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. வெள்ளலூர் கஞ்சிகோணாம் பாளையத்தில் உள்ள நிலங்கள் குறித்து தனக்கும் தனது சகோதரர்களுக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதென்றும், தங்கள் குடும்பத்தாருக்கு சொந்தமான நிலத்தில் " திருவாதிரை ரெசிடென்சி" என்ற அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப்பிரிவில் கட்டிடம் கட்டுவதற்கு சட்டத்திற்குப் புறம்பாக செயல் அலுவலர் அனுமதி வழங்கியுள்ளார் என்று விசாரணையின்போது தெரிவித்தார்.

6. கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களும் முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து தல ஆய்வு செய்து அறிக்கையினை 08.12.2016 மற்றும் 21.12.2016 தேதியிட்ட கடிதங்களில் சமர்ப்பித்துள்ளார். வெள்ளலூர் பேரூராட்சி புல எண். 272/1–ல் 1.00 ஏக்கர் பரப்பளவுள்ள விவசாய நிலத்தில் கோவை நகர் ஊரமைப்புத் துறையின் திட்ட அனுமதி பெறாமல் திருவாதிரை ரெசிடென்சி என்ற பெயரில் 24 மனைகள் பிரிக்கப்பட்டுள்ளன என்றும் 10 சதவித நிலங்கள் சாலைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு பத்திரப்பதிவு செய்து தன்னிச்சையாக செயல் அலுவலர் திரு ந. சுரேஷ்குமார் தானமாகப்பெற்றார் எனத் தெரிவித்துள்ளார். இம்மனைப்பிரிவில் கட்டிடம் கட்ட எட்டு நபர்களுக்கு இப்பேரூராட்சியின் செயல் அலுவலர்கள் திரு ம. லட்சுமணன், திருமதி இந்துமதி மற்றும் திரு ந. சுரேஷ்குமார் ஆகியோரால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப்பிரிவில் சாலை மற்றும் பொது உபயோக இடங்களை தானமாகப் பெறுவதற்கு செயல் அலுவலர் திரு ந. சுரேஷ் குமார் தன்னிச்சையாக செயல்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். மேலும், அங்கீகரிக்கப்படாத மேற்படி வீட்டுமனைப்பிரிவில் முதன்முதலாக இரண்டு மனைகளுக்கு 2011–ல் கட்டிட அனுமதி வழங்கிய முறைகேட்டிற்கு ஓய்வு பெற்ற செயல் அலுவலர் திரு ம. லட்சுமணன் பொறுப்பாவார் என்றும் தெரிவித்துள்ளார். அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப் பிரிவில் சாலை மற்றும் பொதுப்பயன்பாட்டு நிலங்களை தானமாகப் பெற்றதனால் 268.34 மீட்டர் நீளத்திற்கு வடிகால் அமைக்கப்படாமல் ரூ.8,05,020/–ம் மற்றும் தெருவிளக்குகள் அமைக்கப்படாமல் ரூ.75,000/–ம் என மொத்தம் ரூ.8,80,020/– செலவினத்தை பேரூராட்சியே ஏற்க வேண்டியுள்ளதால், இவ்விழப்பிற்கு செயல் அலுவலர் திரு ந. சுரேஷ்குமார் அவர்களே பொறுப்பாவார் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், 22.12.2016 தேதியிட்ட கோவை மண்டல பேரூராட்சி உதவி இயக்குநரால் அங்கீகரிக்கப்படாத 24 மனைகளில் அபிவிருத்தி கட்டணமாக 8 மனையிடங்களுக்கு ரூ.65,689/– வசூலிக்கப்பட்டு கட்டிட உரிமம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

7. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள், வெள்ளலூர் பேரூராட்சி செயல் அலுவலர்களின் அறிக்கை மற்றும் கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோரின் அறிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. இந்நேர்வில் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப்பிரிவில் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கியது மற்றும் வரன்முறைப்படுத்தப்படாத சாலைகள் மற்றும் பொதுப்பயன்பாட்டு நிலங்களை தானமாகப் பெற்றதனால் தேவைப்படும் அடிப்படை வசதிகளை செய்வதற்கான கட்டாயம் பேரூராட்சிக்கே ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் செலவினத்தையும் பேரூராட்சி ஏற்க வேண்டியுள்ளது. அங்கீகாரமற்ற மனைப்பிரிவில் முதன்முதலில் இரண்டு நபர்களுக்கு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கியதற்கு பொறுப்பான செயல் அலுவலர் திரு ம. லட்சுமணன் அவர்கள் 30.04.2016 அன்று பணிமூப்பின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனவே, திரு ம. லட்சுமணன் அவர்கள் மீது ஓய்வூதிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என இம்முறையமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், செயல் அலுவலர் திருமதி இந்துமதி அவர்களும், மேற்குறிப்பிட்ட வீட்டுமனைப்பிரிவில் வீடுகள் கட்டுவதற்கு மூன்று நபர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார். எனவே, திருமதி இந்துமதி அவர்கள் மீதும் உரிய ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளப்படவேண்டும். செயல் அலுவலர் திரு ந. சுரேஷ்குமார் அவர்களும் மூன்று நபர்களுக்கு வீடுகட்ட தந்து அனுமதிகள் வழங்கியதோடல்லாமல் சாலை மற்றும் பொதுப்பயன்பாட்டு நிலங்களை பேரூராட்சிக்கு தானமாகப் பெற்றுள்ளார். அதனால், வடிகால் மற்றும் தெருவிளக்குகள் அமைத்து தரும் பொறுப்பினை பேரூராட்சியே ஏற்கவேண்டியுள்ளது. பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள ரூ.8,80,020/– நிதி இழப்புக்கு செயல் அலுவலர் திரு ந. சுரேஷ் குமார் பொறுப்பாவதால் அவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்

ஆகவே அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளில் சட்டத்திற்கு புறம்பாக கட்டிட அனுமதி வழங்கிய செயல் அலுவலர்கள் திரு ம.லட்சுமணன் (ஓய்வு பெற்றவர்) மீது ஓய்வூதிய விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கவும் திருமதி இந்துமதி மீதும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் மற்றும் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகளில் சட்டத்திற்கு புறம்பாக கட்டிட அனுமதி வழங்கியதோடில்லாமல் பொது பயன்பாட்டிற்கு நிலங்களை தானமாக பெற்று வளர்ச்சி பணிகள் செய்திட ரூ. 8,80,020/– நிதி இழப்பிற்கு காரணமாக இருந்ததாலும் செயல் அலுவலர் திரு ந. சுரேஷ்குமார் என்பவர் மீதும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் பேரூராட்சி இயக்குநருக்கு பரிந்துரை செய்து ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, மே திங்கள், 3–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்
9/5/17

பெறுநர்

1. **திரு. எஸ். திருமூர்த்தி,**
   **2, பூதாண்டி கோயில் வீதி,**
   **கஞ்சிகோனாம்பாளையம்,**
   **வெள்ளலூர், கோயம்புத்தூர் மாவட்டம் –641 111.**

2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ,
   பேரூராட்சிகளின் உதவி இயக்குநரகம்,
   கோவை மண்டலம்,
   மாவட்ட ஆட்சியரகம், கோவை மாவட்டம்.

3. **செயல் அலுவலர்,**
   **வெள்ளலூர் பேரூராட்சி, வெள்ளலூர், கோயம்புத்தூர் மாவட்டம்.**

4. **பேரூராட்சிகளின் இயக்குநர்,**
   **குறளகம், சென்னை – 600 108.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
**இ.கோ. / உதிரிகள்**